# வாக்கியம் அமைத்தல்

(வ வரிசை சொற்கள்)

1. வணக்கம்

அனைவருக்கும் காலை வணக்கம்.

2. வட்டம்

அப்பளம் வட்ட வடிவில் இருக்கும்.

3. வரம்

இயற்கை கடவுள் தந்த வரம்.

4. வண்டு

சோலையில் வண்டுகள் ரீங்காரம் செய்தன.

5. வணிகம்

வணிகம் செய்ய கடல் தாண்டி செல்வார்கள்.

6. வயிறு

கமலாவின் வயிறு சரியில்லை.

7. வருடம்

இந்த வருடம் மழை அதிகம் பெய்ய வாய்ப்புள்ளது.

8. வலி

கந்தனுக்கு கால் வலிக்கிறது.

9. வண்டி

நான் தொடர்வண்டியில் ஊருக்குச் சென்றேன்.

10. வயது

எனது வயது பத்து.

11. வயல்

ஏர் கொண்டு வயலை உழுதனர்.

12. வங்கி

என் தந்தை வங்கியில் பணிபுரிகிறார்.

13. வடை

காக்கா வடையை தூக்கிச் சென்றது.

Notebook writer

14. வண்ணத்துப்பூச்சி

நான் வண்ணத்துப்பூச்சி பூங்காவிற்கு சென்றேன்.

15. வளையல்

வண்ண வண்ண கண்ணாடி வளையல்கள் வாங்கினேன்.

16. வலை

வலையைக் கொண்டு மீன்களைப் பிடிப்பர்.

17. வழி

மதுரைக்கு செல்லும் வழி இதுதானா?

18. வருத்தம்

அப்துல்கலாம் மரணம் வருத்தம் அளிக்கிறது.

19. வரலாறு

நாம் அனைவரும் நம் நாட்டின் வரலாற்றை தெரிந்து கொள்ள வேண்டும்.

## 20. வரிக்குதிரை

மிருகக்காட்சி சாலையில் வரிக்குதிரைப் பார்த்தோம்.

Notebook writer